www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மாதிரித் தேர்வு 2022–2023

## சமூக அறிவியல்

வகுப்பு : 7

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:–** 7 X 1 = 7

1. அத்வைதம் எனும் தத்துவத்தை போதித்தவர் யார்?
   அ. இராமானுஜர் ஆ. இராமநந்தர் இ. நம்மாழ்வார் ஈ, ஆதி சங்கரர்

2. **கூற்று** : பழைய மதங்களின் குருமார்களிடமிருந்து தான் கற்றுக்கொள்வதற்கு எதுவுமில்லை என கௌதமர் தெரிந்து கொண்டார்.
   **காரணம்**: துறவு வாழ்க்கையை மேற்கொள்வதே வீடுபேறு எனப்படும் முக்தி அடைவதற்கான ஒரேவழி என மதங்கள் அறிவித்தன.
   அ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்
   ஆ) கூற்று சரி , காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
   இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.
   ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

3. ________________________ வட அமெரிக்காவின் நீளமான ஆறு ஆகும்.
   அ. மெக்கென்ஸி ஆ. மிஸிஸிப்பி இ. புனித லாரன்சு ஈ. கொலரடோ

4. வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய நான்கும் ________திசைகள் ஆகும்.
   அ) அட்சரேகை ஆ) புவியியல் இ) முக்கியமான ஈ) கோணங்கள்

5. சாலை விபத்துகள் ஒரு நாட்டின் ________________ பாதிக்கின்றன.
   அ) முன்னேற்றத்தை ஆ) வாழ்வை இ) பொருளாதாரத்தை ஈ) மேற்கூறிய அனைத்தையும்

6. இந்தியாவின் முதல் பெண் பாதுகாப்புத்துறை அமைச்சர் ________________.
   அ. சுச்சித கிருபாளினி ஆ. பிரதிபா பாடீல் இ. நிர்மலா சீத்தாராமன் ஈ. மீரா குமார்

7. வளர்வீத வரிக்கு எதிராக அமைந்துள்ள வரி ________________.
   அ. விகிதாச்சார வரி ஆ. தேய்வுவீத வரி இ. விகிதாச்சார வரி மற்றும் தேய்வுவீத வரி ஈ. இவற்றில் எதுவுமில்லை

www.Padasalai.Net

**II.கோடிட்ட இடத்தை நிரப்புக :** 5 X 1 = 5

8. சீக்கியர்களின் புனித நூல் ____________________ ஆகும்.
9. பூமத்திய ரேகைப் பகுதியில் இருக்கும் ______________________ உலகின் நுரையீரல் என அழைக்கப்படுகிறது.
10. _________________ நியாமற்ற வர்த்தக நடைமுறைகளை சரிபார்க்க நுகர்வோர் பாதுகாப்பு துறையின் மகாசாசனம் என்று கருதப்படுகிறது.
11. மறைமுக வரி என்பது ___________ நெகிழ்ச்சி உடையது.
12. 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி தமிழ் நாட்டில் சமணர்களின் எண்ணிக்கை _________________________ விழுக்காடாகும்.

**III.பொருத்துக :** 5 X 1 =5

13.. இரதி மண்டபம் – 1986
14. சூறாவளி – இலங்கை
15. சிரிமாவோ பண்டாரநாயக் – பெட்ரோல் பங்க் குறியீடு
16. இந்திய தர நிர்ணய பணியகம் – புயலின் கண்
17. எச்சரிக்கைக் குறியீடுகள் – திருக்குறுங்குடி

**IV.பொருந்தாததை வட்டமிடு:** 2 X 1 =2

18. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார்.
19. மிஸிஸிப்பி ஆறு, மிஸ்சௌரிஆறு, கொலராடோ ஆறு, அமேசான் ஆறு, ரியோகிரன்டி நதி

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

**V. சரியா? தவறா?**

3 X 1 =3

20. இராஜசிம்மன் காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டினார்.
21. NDMA – என்பது தேசிய பேரிடர் மேலாண்மை.
22. 1981 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி ஆண்களின் கல்வியறிவு 29.76 விகிதம் ஆகும்.

**VI. வேறுபடுத்துக:– ஏதேனும் ஒன்று :** 2 X1 = 2

23. பிரெய்ரி மற்றும் பாம்பாஸ் புல்வெளிகள்
24. புவி அதிர்ச்சி மற்றும் ஆழிப்பேரலை

**VII. சுருக்கமாக விடையளிக்க. (ஏதேனும் எட்டு வினாக்களுக்கு விடையளி)** 8 X 2 = 16

25. நாயன்மார்கள் மொத்தம் எத்தனை பேர்? அவர்களில் முக்கியமானோர் யாவர்?
26. தஞ்சை பெரிய கோவிலின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.
27. புத்தரின் நான்கு பேருண்மைகளைக் கூறுக.
28. குறிப்பு:– மின்னணு வரைபடங்கள் பற்றி சிறுகுறிப்பு வரைக.
29. வெள்ளத்தினால் ஏற்படும் மூன்று விளைவுகள் பற்றி எழுதுக.
30. பாலின சமத்துவம் என்றால் என்ன?
31. நுகர்வோரின் உரிமைகளைப் பட்டியலிடுக.
32. இரவு நேரங்களில் வாகனம் இயக்குவது பாதுகாப்பற்றது ஏன்?
33. சரக்கு மற்றும் சேவை வரி என்றால் என்ன?
34. வரிகளின் முக்கியத்துவம் ஏதேனும் மூன்றினைக் கூறுக.

**VIII. விரிவான விடையளி:– ( ஏதேனும் மூன்று)** 3 X 5 = 15

35. இந்திய சமுகத்தில் பக்தி இயக்கம் எவ்விதத் தாக்கத்தை ஏற்படுத்தியது?
36. சமணம், பௌத்தம் பற்றி அறிய உதவும் சான்றுகளை வரிசைப்படுத்துக.
37. நில வரைபடத்தின் முக்கிய கூறுகள் யாவை? அவற்றைப் பற்றி எழுதுக.
38. பேரிடர் மேலாண்மை சுழற்சி பற்றி ஏதேனும் மூன்றினை விளக்குக.
39. 1986 –ம் ஆண்டு இயற்றப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் முக்கியத்துவத்தை விவரி?
40. நேர்முக மற்றும் மறைமுக வரியை உதாரணத்துடன் விளக்குக.

**IX. கொடுக்கப்பட்டுள்ள இடங்களை வட அமெரிக்கா வரைபடத்தில் குறிக்கவும் :** 5 X 1= 5

1. பசுபிக் பெருங்கடல்
2. மீன் பிடி தலம் ( கிராண்ட் பேங்க்)
3. மெக்சிகோ வளைகுடா
4. கிரீன்லாந்து
5. ஹட்சன் விரிகுடா

www.Padasalai.Net
3315603602